தமிழீழத் தந்தை செல்வா

மா. கு. ஈழவேந்தன்

(பொதுச் செயலாளர்-தமிழீழ விடுதலை அணி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''தமிழீழத் தந்தை செல்வா''

முதற்பதிப்பு : எப்பிரல் 1990

அச்சாக்கம் : ஜே. வி. கே. பிரிண்டர்ஸ்,
11, கெங்கையம்மன் கோவில் தெரு,
சென்னை-600 024. போன் : 427526

வெளியீடு : தமிழீழ விடுதலை அணி

விலை ரூ. 2-00

கிடைக்குமிடம் :
எண். 4, முனிரத்தினம் தெரு,
அமைந்தகரை
(ஓட்டல் அருண் அருகில்)
சென்னை-600 029.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுழைவாயில்

தமிழீழ விடுதலை வரலாற்றில் தந்தை செல்வாவிற்கு ஒரு தனி இடம் உண்டு. விடுதலை தவறி பாழ்பட்டுக் கிடந்த ஈழத்தமிழ் சமுதாயத்திற்கு உயிர் கொடுத்து உரிமைக்குரல் எழுப்பச் செய்த பெருமை நம் தந்தை செல்வாவையே சாரும். நெருக்கடிக்கு ஈடு கொடுத்த ஒரு தலைவனாக அவர் விளங்கினார். இதை ஆங்கிலத்தில் (A Leader in Crisis) என்று வருணிக்கலாம்.

இணைப் பாட்சியில் இனிய வாழ்வு காணவே நம் தந்தை செல்வா விரும்பினார். ஏறக்குறைய 30 ஆண்டுகளாக சிங்கள மக்களிடமும், சிங்கள தலைமைப் பீடத்திலும் மனமாற்றம் காண எத்தனையோ வழிமுறைகளை அறக்கோட்பாட்டின் அடிப்படையில் காண முயன்றார். வெறி கொண்ட சிங்கள இனத்திடம் எத்தகைய மனமாற்றத்தையும் காண முடியாத நிலையில் தான் தமிழீழம் முடிந்த முடிவு என்பதனை அவர் மறைவதற்கு ஓராண்டுக்கு முன்பு 1976-ம் ஆண்டு எந்தவித ஐயத்திற்கும் இடமின்றி வெளிப்படையாகப் பிரகடனம் செய்தார். வேறு சொற்களில் விளம்பின் தமிழீழக் கோட்பாட்டுக்கு வித்திட்ட பெருமை அவரையே சாரும். அவர் தன் குறிக்கோளை அடைவதற்கு முன்பு அவர் உயிர் அவரை விட்டு நீங்கியது. அவர் கண்ட கனவை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு இன்றைய இளம் தமிழ்ச் சமுதாயத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. எம் நம்பிக்கைக்கு ஈடு கொடுக்கின்ற முறையில் தமிழீழ விடுதலைப் போராளிகள் தம் உயிரையே துச்சம் என மதித்துப் போர்க்களத்தில் குதித்துள்ளனர். உயிர் கொடுத்தும் உரிமைகாக்க புறப்பட்டுள்ள தமிழீழ விடுதலைப் போராளிகள் தம் இலட்சியத்தை அடைவது உறுதி. உண்மைத் தியாகம் என்றும் வெற்றி அளித்ததென்றே வரலாறு சாற்றுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழீழ விடுதலைப் போராளிகளுக்குத் தலை சாய்த்து வணக்கம்செலுத்துகின்ற நாம் இந்த விடுதலை உணர்வுக்கு-இந்த விடுதலை வேட்கைக்கு வித்திட்ட பெருந்தலைவர்களை நினைவு கொள்ளும் நன்றி உணர்வோடுதான் தந்தை செல்வா பற்றி இச்சிறு நூலை வெளியிடுகிறோம்.

எம் வேண்டுக்கோளை ஏற்று உள்ளம் தொடும் முறையில் உணர்ச்சி பொங்க உண்மை உணர்வோடு அணிந்துரை அளித்த தமிழக சட்டப்பேரவையின் பேரவைத் தலைவர் மாண்புமிகு முனைவர்-பேராசிரியர் தமிழ்க்குடிமகன் அவர் களுக்கும், தமிழீழக் கொள்கையில் நிலைத்த ஈடுபாடு கொண்டு எதுவித தொய்வுக்கும், நொய்வுக்கும் இடம் கொடாது ஓங்கிக் குரல் எழுப்பி வரும் திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் தமிழர் தளபதி திரு. கி. வீரமணி அவர்கள் அளித்த அணிந் துரைக்கும் எம் சார்பிலும், தோன்ற இருக்கும் தமிழீழத்தின் சார்பிலும் எம் நெஞ்சம் நிறைந்த நன்றியினை நவில விழை கிறோம்.

இந்நூலின் உள்ளடக்கம் பல்வேறு கட்டுரை வடிவில் ஈழத்துச் செய்தி இதழ்களாகிய சுதந்திரன், வீரகேசரி ஆகிய இலங்கைச் செய்தி இதழ்களில் வெளிவந்ததோடு தமிழகத்துச் செய்தி இதழ்களாகிய தினமணி, தினசரி, விடுதலை, ஈழ சுதந்திரன் ஆகிய செய்தி இதழ்களில் வெளிவந்த கட்டுரை களே இன்றையச் சூழ்நிலைக்கு ஏற்ப சில மாற்றங்களுடன் இந்நூல் வடிவம் பெற்றுள்ளது என்பதை யாம் இங்கு குறிப் பிட விரும்புகிறோம்.

''பூத்ததடா தமிழீழம் புலர்ந்ததடா தமிழன் வாழ்வு'' என்று கவிஞன் காசி ஆனந்தன் கண்ட கனவு நனவாகட்டும். கவிஞர்கள் கண்ட கனவு இதுவரை பிழைத்ததில்லை. பாரதி கண்ட கனவு பாரத விடுதலையாக மலர்ந்தது. இக்பால் கண்ட கனவு பாகிஸ்தான் தோற்றத்திற்கு வழி வகுத்தது. பாரதி தாசன் கண்ட கனவு திராவிட எழுச்சிக்கும் தன்மான உணர் வுக்கும் உறுதுணையாய் அமைந்துள்ளது. அதே போல் தந்தை செல்வா பட்டபாடு தன்னையே அர்ப்பணித்த தியாக வரலாறும் தமிழீழத்தின் தோற்றத்தில்தான் முடிவுறும் என்ற கவிஞன் காசி ஆனந்தன் சுண்ட கனவும் நனவாவது உறுதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தை செல்வா தான் வாழ்ந்த சூழ்நிலைக்கேற்ப அற வழியில் தமிழீழம் சுணை விழைந்தார். அவர் அறவழியில் விடுத்த வேண்டுகோளை சிங்கள இனம் ஏற்க மறுத்ததன் விளைவு இன்று பிரபாகரன் தலைமையில் மறவழியில் தமிழீழம் மலர இருக்கிறது. சுாலச் சூழ்நிலைக்கு ஏற்பக் கடைப்பிடிக்கப் படும் வழிமுறைள் மாற்றத்திற்கு உள்ளாயிருப்பினும் தமிழீ ழம் மலரப் போகிறது என்பது உறுதி. இது காலத்தின் கட்டா யம். அத்தோடு வரலாறு தரப் போகின்ற தீர்ப்பும் இதுவே யாகும்.

வெல்க தமிழ் ஈழம்.

வணக்கம்,

அன்புள்ள,

மா. கு. ஈழவேந்தன்

சென்னை-29.
25-4-1990

பொதுச் செயலாளர்.
தமிழீழ விடுதலை அணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழக சட்டப்பேரவைத் தலைவர் மாண்புமிகு

தமிழ்க்குடிமகனாரின்

தகவுரை

தமிழீழ விடுதலை அணியின் பொதுச் செயலாளர் திரு. மா. க. ஈழவேந்தன் தந்தை செல்வாவைப் பற்றிய ஒரு சுருக்கமான வரலாற்றைத் தந்துள்ளார்.

கடந்த காலங்களில் தமிழ் ஈழ மண்ணில் ஏற்பட்டுள்ள கொந்தளிப்புகளையும் அதில் தமிழ்நாட்டுத் தமிழர்கள் கொண்ட உணர்ச்சியையும் நாடறியும். என் போன்றவர்கள் கல்லூரி முதல்வராக இருந்தும் 'தமிழன்' என்ற உணர்வோடு கடந்த காலத்தில் நடத்திய போராட்டங்கள், பேசிய உணர்ச்சி மிக்க உரைகள், எழுதப்பட்ட தொடர் கட்டுரைகள் ஆகிய வற்றையும் அனைவரும் அறிவர். 'செந்நீர்க் கடலில் ஈழத் தமிழன்' எனும் நூல் வாயிலாக என் எண்ணங்களை முழுமை யாகத் தெரிவித்திருக்கிறேன். கடுமையான திறனாய்வுகளை யும் செய்திருக்கிறேன்.

இப்போது நான் அரசின் ஒரு பகுதியாக ஆகிவிட்டாலும் என் குன்றாத தமிழுணர்ச்சியை நம்பிக்சையாக வைத்து ஈழவேந்தன் தன் நூலை என்னிடம் தந்துள்ளார்.

பொதுவாகவே அரசியலில் எத்தனையோ தலைவர்கள் வந்து, போய், மறைந்திருக்கிறார்கள். மக்களும் மறந்திருக் கிறார்கள். ஒரு காலத்தில் கொடி கட்டிப் பறந்தவர்கள் இன்று மூலையிலே முக்காடு போட்டுக் கொண்டு முணு முணுத்துக் கொண்டிருக்கிறார்கள். உயர்ந்த குறிக்கோள் இல்லாமை; அதனையே சிந்தித்துச் செயற்படாமை ஆகியவற்றாலன்றி வாய்ப்பு நேரும் போது விலை போகும் குணத்தாலும் பலர் வீழ்ந்திருக்கிறார்கள்.

ஆனாலும் சிலர் மட்டுமே பதவி இருந்தாலும் இல்லா விட்டாலும் தன் நிலையிலிருந்து தாழாமல் நிமிர்ந்து நிற் கிறார்கள். அத்தகைய தலைவர் கலைஞரின் அரவணைப்பில் ஆரா இன்பத்தை உணர்ந்த என் போன்றவர்கள் தந்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வாவின் அருமையை உணர்ந்து போற்ற வேண்டியுள்ளது.

தமிழ் ஈழ மக்களின் முன்னோடித் தலைவராக விளங்கிய ஜி. ஜி. பொன்னம்பலம் அதே நிலையில் தொடரவில்லை. அரசு வாய்ப்பும் சலுகையும் வந்தவுடன் தன் பின் தொடர்ந்த தமிழ் மக்களை மறக்க வேண்டியதாயிற்று.

தமிழ் ஈழத் தலைவர்கள் 1948-ல் இந்தியத் தமிழர்களின் வாக்குரிமையும் குடியுரிமையும் பறிக்கப்பட்ட போது எதிர்க் குரல் கொடுத்திருக்க வேண்டும். மாறாக அப்போது சிங்கள அரசின் இந்தச் செயலுக்கு ஒத்துப் போனதின் விளைவு தமிழின ஒற்றுமையின் சீர்குலைவு. இந்த நிலையிலும் யாழ்ப் பாண, மலையக, இசுலாமியத் தமிழர்கள் என்ற வேறுபாடின்றி ஒரு நிலைப்பாடு எடுத்தவர் தந்தை செல்வா அவர்கள்.

காந்திய நெறியிலேயே கடைசி வரை போராடிப் பார்த்த வர். 1948 முதல் 1976 வரை சிங்கள அரசுடன் பேசிப் பேசி ஒப்பந்தம் கண்டும் பயன் கிடைக்காதது கண்டும், மெல்லத் தமிழினம் புதைந்து கொண்டிருக்கும் நிலை கண்டும் வட்டுக் கோட்டை மாநாட்டின் வழி விடுதலைப் போர் முரசம் கொட்டி யவர் தந்தை செல்வா அவர்கள். அவரை வழிகாட்டியாகவும், தோன்றாத் துணையாகவும் கொண்டுதான் இன்று தமிழ் ஈழப் போராட்டம் முன்னெடுத்துச் செல்லப்படுகிறது.

தமிழர்கள் உண்மையான தலைவர்களைப்பற்றிய வரலாறு களைத் தெரிந்து கொண்டே ஆக வேண்டும். வரலாற்றுச் சிந்தனையோ, அறிவோ துளியும் கலக்காத வெறும் இலக்கிய அறிவால் பெரும் பயன் ஏதுமில்லை என்பது என் கருத்து,

அந்த வகையில் ஈழவேந்தன் சரியான நேரத்தில் மிகச் சரியான ஒரு தலைவரைப் பற்றிய ஒரு நூலைத் தந்துள்ளார். அனைவரும் விலை கொடுத்து வாங்கிப் படித்து உணர்ச்சி கொள்ள வேண்டும்.

மூனைவர் தமிழ்க்குடி மகன்

பேரவைத் தலைவர்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானமிகு தமிழர் தளபதி வீரமணியின் விழுப்புரை!

மலேசியா நாட்டில் ஈப்போவில் பிறந்த ஈழத் தமிழர் தந்தை செல்வா ஒடுக்கப்பட்ட ஈழத் தமிழர்களுக்காக முதல் உரிமைக் குரல் கொடுத்த தமிழர் தலைவர் ஆவார்.

கிறித்தவராக இருந்தாலும் மத அகழி அவரைத் தமிழர் களிலிருந்து பிரிக்கவில்லை.

ஈழத் தமிழர்கள் மதத்திற்கு அப்பாற்பட்டு தமிழர் தலைவர் என்கிற கண்ணோட்டத்தில் மட்டும் அவரைப் பார்த் தனர் என்றால் அங்கேதான் தந்தை செல்வாவின் சிறப்பும், தமிழர் நலம் பேணிய தகைமையும் பளிச்சிடுகின்றன. மதமும் ஜாதிகளும் தமிழர்களைப் பிரிக்கக் கூடாது என்பதற்கு அவர் ஒரு எடுத்துக்காட்டு.

இந்நூலை எழுதியுள்ள ஈழத் தமிழர்களுக்காக-நாவைப் போர்வாளாக நாளெல்லாம் சுழற்றி வரும் தோழர் ஈழவேந்தன் அவர்கள் தந்தை செல்வா அவர்கள் பற்றி ஒரு ''சுருக்கத்தில் நிறைவு'' என்கிற தன்மையில் எளிமையாக-செறிவாக இந்நூலை எழுதியுள்ளார்கள்.

வன்முறைக்கு இடமில்லாமல் இயக்கம் நடத்தினார். பாராளுமன்ற முறையைப் பின்பற்றி உரிமைக்குரல் கொடுத் தார். கடைசியில் தனியீழமே தமிழர்களின் நோய்த் தீர்க்கும் மருந்து என்பதை தந்தை செல்வா உணர்ந்தார்.

அந்த நிலையைத் தோற்றுவித்தது சிங்களப் பேரின வாதமே என்பதை இந்நூல் சுட்டிக் காட்டுகிறது.

தந்தை செல்வா அவர்களைப் பற்றி மட்டுமல்ல; ஈழத் தமிழர்களின் உரிமைப் போர்க் குரலின் பரிணாமத்தையும் கூட இந்நூல் ஓரளவு படம் பிடித்துக் காட்டுகிறது.

தமிழ்நாட்டில் நடைபெற்று வந்த - நடைபெற்று வரும் போராட்டத்தை ஒப்பிட்டு ஈழ விடுதலைப் போராட்டத்தையும் அழகு ஓவியமாகத் தீட்டியுள்ளார்.

தனியீழப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்திக் காட்டும் பிற்போக்குச் சக்திகளின் பிரச்சாரத்திற்குப் பலியாகியுள்ள அப்பாவித் தமிழர்களின் கண்களைத் திறக்க இச்சிறு நூல் பயன்படும் என்று உறுதியாகக் கருதுகின்றேன். முயற்சியைப் பாராட்டுகின்றேன்.

கி. வீரமணி

பொதுச் செயலாளர், திராவிடர் கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழீழத் தந்தை செல்வா!

வரலாற்றை மாற்றும் தலைவர்கள்:

உலகில் தோன்றி மறைவோர் எண்ணிக்கை எண்ணில் அடங்காது. ஆகவேதான், தோன்றி மறைவோர் அனைவரையும் நாம் எண்ணிப் பார்ப்பதில்லை. ஆனால், ஒரு சிலரின் தோற்றமும் மறைவும் உலகின் வரலாற்றையே மாற்றி இருக்கிறது.

உலகத் தலைவர்கள் என்று கூறுகின்றபோது அவர்கள் ஆன்மீகத் தலைவர்களாகவும், அரசியல் தலைவர்களாகவும், அறிவியல் தலைவர்களாகவும், இலக்கியத் தலைவர்களாகவும் மற்றும் பல்வேறு துறைகளிலும் தலைவர்கள் என்று கணிக்கத் தக்க முறையில் தம் வாழ்வை நடாத்திச் சென்றனர்.

பல்வேறு நிலையிலுள்ள தலைவர்கள்

தலைவர்கள் என்று கணிக்கப்படும் அனைவரும் ஒரே நிலையில்தான் இருப்பார்கள் என்று நாம் கருதத் தேவை இல்லை. பெருந்தலைவர்கள் அனைவரிடமும் உலகளாவிய சிந்தனை உண்டு என்பதை நாம் ஏற்கின்ற போதும், ஒவ்வொரு தலைவனுடைய வாழ்வும் பணியும் அவர் வாழ்கின்ற சூழ்நிலைக்கு ஏற்ற முறையில் அமைகின்றது.

எனவேதான் ஒருசில தலைவர்களை உச்சிமீது வைத்துப் போற்றுவதும், மற்றவர்களைக் கொஞ்சம் குறைத்து மதிப்பிடுகின்ற சூழ்நிலையும் உருவாவதைத் தவிர்ப்பது கடினம். எனினும், ஒவ்வொரு தலைவனும் தம் தனி முத்திரையைப் பதிக்கின்ற முறையில் பணியாற்றிச் சென்றுள்ளதை நாம் ஏற்றே ஆகவேண்டும். எனவேதான் ஒவ்வொரு தலைவரையும் நாம் மதிப்பிடுகின்றபோது மிக எச்சரிக்கையோடு பொறுப்புணர்ச்சியோடு மதிப்பீடு செய்யவேண்டி இருக்கிறது.

இந்திய விடுதலைக்குழைத்த தலைவர்கள்:

இந்தியாவின் விடுதலை வரலாற்றை நாம் ஆய்வு செய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்ற போது மகாத்மா காந்தி, ஜவஹர்லால் நேரு, சுபாஷ் சந்திரபோஸ், இராஜாஜி. வ.உ.சி. போன்றோருடைய பெயர்கள் எம் நினைவிற்கு வருவது உண்டு.

அதுபோல், தமிழகத்தில் திராவிட எழுச்சிக்கு தமிழின விழிப்புணர்வுக்கு பணியாற்றியவர்களை எண்ணுகிண்றபோது பெரியார், அண்ணா, கலைஞர், வீரமணி ஆகியோரின் பெயர்கள் எம் நினைவலைகளில் மோதுகின்றன.

தமிழகத்திலும் ஈழத்திலும் ஏற்பட்ட ஆதிக்க எதிர்ப்புகள்

தமிழகத்தில் வட இந்திய ஆதிக்கத்தையும், இந்தி திணிப்பையும் எதிர்த்து திராவிட இயக்கம் உருவாகி பெரியார், அண்ணா, கலைஞர், வீரமணி ஆகியோர் போர்க்குரல் எழுப்பினார்களோ, அதே அடிப்படையில் ஈழத்தில் சிங்கள வல்லாண்மையையும், சிங்கள திணிப்பினையும் எதிர்த்து முதலில் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் தலைமையில் தமிழ்க் காங்கிரஸ் உருவாகியது. ஆனால் தமிழ் இனத்தையேக் காட்டிக்கொடுக்கின்ற அளவுக்கு அமைச்சர் பதவி திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்தை ஆட்கொண்டபோது அதில் மயங்கி அம்மாய வலையில் சிக்கின போது தடம்புரண்ட தலைவரை வெளியேற்றி தமிழ் இனத்தின் அழிவைத் தடுத்து ஆட்கொண்ட பெருமை தந்தை செல்வநாயகத்தையும் அவருக்கு பக்க பலமாக விளங்கிய திரு. வன்னிய சங்கம் நாகநாதன் ஆகியோரையுமே சாரும்.

இதுபோன்ற தமிழக மக்கள் தந்நிலை மறந்து தாம் அடிமைகளாக வாழ்ந்த நிலையில்கூட தன் அடிமை வாழ்வைப் பற்றி எண்ணிப் பார்க்காத நிலையில் ''ஏ தாழ்ந்த தமிழகமே! விழித்தெழு. ஆரிய மாயையில் அழிந்துச் சாகாதே. இந்தித் திணிப்பினால் ஏற்படும் இழி நிலையை உணர்ந்து செயல்படு'' என்று தட்டிக் கேட்டு தமிழ் மக்களை வழி நடாத்திச் சென்ற பெருமை தந்தை பெரியாரையும், பேரறிஞர் அண்ணாவையும், கலைஞர் கருணாநிதியையுமே சேரும். காலத்தின் தேவையை உணர்ந்து சாலச் சிறந்த பணியினை இவர்கள் செய்யாது விட்டிருப்பின் மெல்லத் தமிழினம் சாகும் நிலை ஏற்பட்டிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழகத்தின் அரவணைப்பை நாடிய தமிழ் ஈழத் தலைவர்கள்

வேறு சொற்களில் விளம்பின் இத்தகைய ஒரு ஒத்த நிலை ஈழத்திலும், தமிழகத்திலும் நிலவியது. ஈழத்து மக்கள் இத் தகைய வீர தீரச் செயல்களில் ஈடுபட்ட போதும் தம் எல்லைப் பரப்பும் எண்ணிக்கையும் குறைந்த நிலை யில் தமிழகத்தின் அரவணைப்பையே அவர்கள் நாடி நின்ற னர். எனவேதான் 1956-ம் ஆண்டு தொடங்கி இதுகாலவரை யில் ஈழத் தமிழ்த் தலைவர்கள் தமிழகத் தலைவர்களின் துணையை நாடித் தம் பணியை ஆற்றுகின்றனர். 1958-ல் திரு. வன்னிய சிங்கம் தமிழகத்துக்கு வருகை தந்து தமிழகத் தலைவர்களோடு தொடர்பு கொண்டு ஆற்றிய பணியும், பின்பு 1972-ல் தந்தை செல்வா தலைமையில் ஒரு குழு வந்து பெரியார் கலைஞர் உட்பட பல தலைவர்களைச் சந்தித்து ஆற் றிய பணியும் இங்கு நினைவிற்கொள்ளத்தக்கது.

1972-ல் தந்தை செல்வா தமிழகம் வருகை தந்தபோது கடல் கடந்து வாழுகின்ற தமிழ் மக்களின் கண்ணீர் துடைக் கின்ற காவல் தெய்வமாக விளங்கிய கலைஞர் அவர்கள் அவரை வரவேற்று தெம்பும், நம்பிக்கையும் நல்குகின்ற முறை யில் காட்டிய உற்சாகத்தையும், வழங்கிய நல்லுரைகளையும் தந்தை செல்வா அடிக்கடி நினைவுகொண்டு மகிழ்வதுண்டு.

செல்வாவுக்கும் கலைஞர்க்குமிடையே நிலவிய பிரிக்கமுடியாத பிணைப்பு

அவ்வாண்டு தொட்டு தந்தை செல்வாவுக்கும், கலைஞ ருக்கும் இடையில் ஒரு பிரிக்க முடியாத பிணைப்பு நிலவியது. தம் உள் உணர்வுகளை எடுத்துரைக்கும் கருத்துக்களைத் தாங் கிய கடிதங்களும் இருவரிடையே பரிமாறப்பட்டன.

1977-ல் தந்தை செல்வா உடல் நலிந்த நிலையில் நல்ல முறையில் நடக்க முடியாது தம் தெல்லிப்பளை-யாழ்ப்பான இல் லத்தில் தடம் புரண்டு விழுந்தபோது அவர் தலையில் காய முற்று செயலிழந்து யாழ்ப்பாண மருத்துவ விடுதியில் சேர்க்கப் பட்டார். தம் உயிரோடு போரிட்ட இப்பெருமகனைக் காப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாற்ற கலைஞர் ஆற்றிய பணி எம் கண்களில் நீர் பெருகச் செய்யும் பணியாகும்.

இங்குள்ள சிறப்பு நரம்பு மருத்துவர் இராமமூர்த்தியை யாழ்ப்பாணத்திற்கு வானூர்தி வாயிலாக அனுப்பி, தந்தை செல்வாவைப் பார்வையிட்டு உயிரைக் காப்பாற்ற எடுத்த முயற்சியையும், தொலைபேசியில் தொடர்பு கொண்டு அடிக் கடி நலம் விசாரித்த தன்மையையும் நாம் எளிதில் மறக்க முடி யாது. தந்தையின் உயிரைக் காப்பாற்றும் முயற்சியில் கலைஞர் தோல்வி கண்டபோதும் அவரின் உள்ளம் உருக்கும் செய்கைக்கு நாம் என்றும் கடப்பாடுடையோம்.

இலங்கையின் விடுதலைக்கு தமிழ்த் தலைவர்களின் தலையாய பங்களிப்பு:

இந்நிலையில்தான் இலங்கையின் விடுதலை வரலாற்றை எண்ணுகின்றபோது சேர். பொன். இராமநாதன், சேர். பொன். அருணாசலம், எப். ஆர். சேனநாயகா, பேரண்ட் ஜெயதிலகா போன்றோரின் பெயர்கள் நினைவுக்கு வருவ துண்டு. இலங்கையின் விடுதலை வரலாற்றில் சிங்களத் தலைவர்களுடைய பங்களிப்பு உண்டு. எனினும் அவர்களை மிஞ்சுகின்ற முறையில் முன்னே குறிப்பிட்ட சேர். பொன். இராமநாதன், சேர். பொன். அருணாசலம் ஆகிய இரு உடன் பிறப்புகளுடைய பங்களிப்புதான் தலையாயது என்பது இலங் கையின் விடுதலை வரலாற்றை சமன் செய்து சீர்தூக்கி நடு நிலை வழுவாது வரையும் வரலாற்று ஆசிரியர்களின் தீர்ப்பா கும்.

ஏமாற்றப்பட்ட தமிழ்த் தலைவர்கள்

எனினும் முன்பு குறிப்பிடப்பட்ட சேர். பொன். இராம நாதன், சேர். பொன். அருணாசலம் ஆகிய இரு உடன் பிறப்பு களும் இலங்கை ஒன்று என்ற கோட்பாட்டில் நம்பிக்கை வைத்துப் பணியாற்றித் தியாகம் செய்த நிலையிலும், இறுதிக் காலத்தில் தம்மோடு பணிபுரிந்த சிங்களத் தலைவர்களால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏமாற்றப்பட்டு, இலங்கையில் தமிழினத்தின் தனித்துவத்தை நிலை நாட்டக் குரல் எழுப்பி, ஏக்க நிலையில் மறைந்த வரலாறே ஈழத் தமிழர் வரலாறாக இருப்பது நாம் இங்கு எண்ணிப் பார்க்கத் தக்கது.

வெள்ளையனுக்குப் பதில் சிங்களவன் தலைமையேற்பு

வெள்ளையன் வெளியேற அந்த இடத்தில் சிங்களவன் ஆதிக்கம் தலை தூக்கியதே இலங்கை வரலாற்றில் நாம் கண்ட கசப்பான உண்மையாகும். இந்த சிங்கள வல்லாண்மையை உலகம் வியக்கின்ற முறையில் தன் ஆங்கில சொல்லாட்சி கொண்டு எதிர்த்து ஓங்கிக் குரல் எழுப்பியவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் என்ற தலைவர். ஆனால் இதே தலைவர் காலப் போக்கில் சிங்களத் தலைவர்கள் வழங்கிய பட்டங்கள் பதவிகளுக்கு மயங்கி அவர்கள் விரித்த மாய வலையில் சிக்கித் தன்னையும், தமிழினத்தையும் விற்க முனைந்தபோது, அதனைத் தடுத்து ஆட்கொள்ளும் பணியில் தன்னை முற்றாக அர்ப்பணித்து, தொலைநோக்குச் சிந்தனையுடன் 'ஆவது அறிந்து' வரலாற்றில் என்றும் அழியாத இடம் பெறும் முறையில் பெரும் பணியாற்றிய பெருந்தகைதான் நம் தந்தை செல்வநாயகம் அவர்கள்.

நம்பிக்கை நட்சத்திரம் செல்வநாயகம்

நம்பிய தமிழினம் நடுக்கடலில் தத்தளிக்கவிடப்பட்டபோது, தனக்கொரு ஏற்ற தலைவன் இல்லையே என்று தமிழினம் தடுமாறியபோது, தவித்து 'அய்யோ' என்று அலறியபோது, அவர்களின் துன்பம் துடைக்கின்ற முறையில் அவர்களின் நம்பிக்கை நட்சத்திரமாக ஒரு தலைவன் தோன்றினான். அத் தலைவனின் முழுப் பெயர் சாமுவேல் ஜேம்ஸ் வேலுப்பிள்ளை செல்வநாயகம் என்பதே ஆகும்.

இந்த செல்வநாயகம் அவர்கள் இலங்கைத் தமிழ் மகன் தான். ஆனால் பிறந்து இளமையில் வளர்ந்தது மலேசிய நாட்டிலுள்ள ஈபோ என்ற மாநிலத்தில் என்பது இங்கு குறிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடத்தக்கது. காரணம் இவரின் தந்தை வேலுப்பிள்ளை மலே சியாவில்தான் வணிகத்துறையில் ஈடுபட்டிருந்தார். எனினும் இவரின் இளமையில் இவர் தந்தை மறைந்ததன் காரணமாக மீண்டும் யாழ்ப்பாணத்திலும், கொழும்பிலும் இவருடைய வாழ்வு நிலைகொள்ள வேண்டிய சூழ்நிலை உருவாகியது.

தூய்மை துலங்கிய வாழ்வு

நாம் முன்பு குறிப்பிட்டதற்கமைய மலேசியாவில் இவர் பிறந்த மாநிலத்தின் பெயர் ஈபோ என்பாதகும். மலேயா மொழியில் ஈபோ என்பதற்குத் 'தூய்மை' என்பது பொருள். தூய்மை என்ற பெயர் தாங்கி உள்ள ஒரு மாநிலத்தில் இவர் பிறந்ததால்போலும் இவருடைய தனிப்பட்ட வாழ்விலும், அர சியல் வாழ்விலும் தூய்மை துலங்கியது.

படிப்பும் - பட்டமும்

யாழ்ப்பாணத்தில் தூய யோவான் கல்லூரியிலும் 'யாழ்ப் பாணக் கல்லூரியிலும் பயின்றதோடு இளம் அறிவியல் (B.Sc.) பட்டத்தைப் பெற்று சில காலம் ஆசிரியராக தூய தாமஸ் கல் லூரியிலும், வெஸ்லி கல்லூரியிலும் பணிபுரிந்த பிறகு, சட்டக் கல்லூரியில் சட்டம் பயின்று ஒரு பெயர் பெற்ற குடியியல் வழக்குரைஞராக (Civil Lawyer) விளங்கினார்.

பிறப்பும் - மறைவும்

இப்பெருமகன் 1898-ம் ஆண்டு மார்ச் 31-ம் தேதி தோன்றி, 1977-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 26-ம் தேதி தமது 79-வது அகவையில் உயிர் துறந்தார். அவர் இன்று எம்மோடு உயிருடன் இருப்பின், அவரது 92-வது நிறைவு விழாவை ஈழத்தமிழ் மக்கள் மட்டுமல்ல, தமிழகம் உட்பட தமிழ் கூறு ம் நல்லுலகு ஒருங்கிணைந்து கொண்டாடியிருக்கும்.

நடுநடுங்கும் மேனி; நடுங்காக் கொள்கை

''நடுநடுங்கும் கைகால்கள்; நடுங்காக் கொள்கை
நாவெடுத்துப் பேச முடியாவிட்டாலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிடுசிடுப்பு இல்லாது சீராய் நேராய்ச்
செந்தமிழர் வாழ்விற்கே சேர்த்த சொற்கள்
அடுத்தடுத்து வருவதனை அழகு ஈழம்
ஆர்வத்தோ டெதிர்பார்த்து அதனைக் கேட்கும்!
நடுநிலைமை தவறாத நல்ல நோக்கு
நம் தமிழர் மூதறிஞர் செல்வா நோக்கு
பஞ்சடைந்த இருகண்கள்! ஆனால் அந்தப்
பார்வைதான் தமிழ்மகனைப் பலவானாக்கும்!
சென்சிறையுள் புகுதற்கும் விறலை ஈனும்
வேசத்தைத் தீவிரத்தை மேலும் கூட்டும்
அஞ்சாமை மந்திரத்தை அகத்தில் ஓதும்
ஆயிரமாய்த் தியாகிகள் ஆக்கப் போகும்
நஞ்சகளை அமுதாக்கி நமக்கு நல்கும்
நாற்பது லட்சம் தமிழர் நாட்டை மீட்கும்!''

என்று, எளிய, இனிய, ஏற்றமிக்க தமிழ்ச் சொற்கள் கொண்டு, எம் தந்தை செல்வாவின் சிறப்பினை-சீரினை-தமிழ் ஈழத்தின் மீன் பாடும் மட்டக்களப்புக் கவிஞன் ''அக்கரைச் சக்தி' வாழ்த்திய வாழ்த்துரை-பொருள் பொதிந்த பொன்னுரையாகும்.

கவிஞர் கூறுவதுபோல், நடுநடுங்கும் கைகால்களோடு, ஒல்லியான குச்சி வடிவம் தாங்கி, விரைந்து நாவெடுத்துப் பேச முடியாத நிலையிலேயே நம் தந்தை செல்வா வாழ்ந்து, தனது 79-ம் அகவையில் முதுமையுற்ற நிலையில் அவர் உயிர் துறந்தது உண்மை. ஆனால் தனது இறுதி மூச்சுவரை தன் கொள்கைப் பிடிப்பில் எதுவிதத் தளர்ச்சியையோ, ஈடாட்டத்தையோ காட்டாது உறுதியோடு விளங்கினார்.

உலகில் பெருமக்கள் பலர் தம் இறுதிக் காலத்தில் தம் கொள்கையில் தள்ளாடித் தடம் புரள்வது உண்டு. ஆனால், நம் தந்தை செல்வாவோ தன் உடல் தளர்ந்த நிலையிலும் உள்ள உறுதியோடு இருந்தார். அவருடைய உடல் தளர்ந்த நிலையில் கைகள் நடுங்கின. கால்கள் நடுங்கின. மேனி நடுங்கியது. நாவும் நடுங்கியது.

ஆனால் அவரிடம் என்றுமே கொள்கை நடுக்கம் ஏற்பட்டதில்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுங்குகின்ற வயதிலும் நடுங்காத கொள்கை அவரிடம் இருந்தது. ஆனால் இன்று எம்முடைய தலைவர்கள் பலரிடம் நடுங்காத வயதில்கூட கொள்கை நடுக்கத்தைக் காண்கிறோம். எனவேதான் தந்தை செல்வாவுடன் மாறுபட்ட அரசியல்வாதி கள்கூட கொள்கைக் குன்றாய் விளங்கிய அவரைத் தலை தாழ்த்தி வணக்கம் செலுத்துகின்றனர்.

எதிர்கால ஏற்றத்துக்கு பணிபுரிந்த ஏந்தல்

அரசியல் என்பது ஒரு அழுக்குப் படிந்தக் குட்டை என்று மக்கள் சொல்வர். ஆனால், அந்த அழுக்குப்படிந்த குட்டையின் அழுக்கை நீக்கி தூய்மை துலங்கச் செய்த பெருமை இவரையே சாரும்.

அரசியல்வாதிகள் பலர் வருகின்ற தேர்தலையே நினைவு கொண்டு கொள்கை வகுப்பது வழக்கம். ஆனால், தந்தை செல்வாவோ வருகின்ற தேர்தலில் ஏற்படுகின்ற வெற்றி தோல்வி பற்றிப் பொருட்படுத்தாது, எம் எதிர்கால வழித் தோன்றல்களின் வாழ்வு வளம் பெறும் முறையில் தன் பணி களை அமைத்துக்கொண்டார். ஆகவேதான் அவரை ஒரு சாதாரண அரசியல்வாதியாக எவரும் கொண்டதில்லை. மாறாக ஒரு அரசியல் ஞானியாக அனைவராலும் மதித்துப் போற்றப்பட்டார். வாழ்த்தி வழுத்துதற்குரியவராக விளங்கி னார்.

பொருள் பொதிந்த பேச்சாளர்

தந்தை செல்வா ஒரு தலைசிறந்த சொற்பொழிவாள ராகவோ, சொல்லேர் உழவராகவோ விளங்கியதில்லை. அவர் பேசியதும் குறைவு, எழுதியதும் குறைவு. ஆனால் அவ ருடைய எண்ணங்கள் அனைத்தும் ஆழமுடையதாகவும், ஆக் கம் தருபவையாகவும் எம் வாழ்வின் ஏற்றத்துக்கு ஓர் ஏணியாக வும் விளங்கினார். சொல்லின் அழகைவிட சொல்லில் பொதிந்து கிடக்கும் பொருளைப்பற்றித்தான் அவருடைய சிந் தனை அமைந்திருந்தது. இறுதிக் காலத்தில் அவர் உடல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நலிவுற்றதன் காரணமாக அவரின் வாயிலிருந்து சொற்கள் வருவது கடினமாக இருந்தது. எனினும், அவர் என்ன சொல்ல விரும்புகிறார் என்பதை அறிவதற்குப் பொதுக்கூட்டங்களில் மக்கள் காட்டிய ஆர்வம் அவர் வாயிலிருந்து வரும் ஒவ்வொரு சொல்லையும் தமிழ் மக்கள் செவிமடுத்த பாங்கு அவர் எவ்வளவு தூரம் மக்களின் நம்பிக்கைக்குரிய தலைவராக விளங்கினார் என்பதை உலகிற்குப் பறைசாற்றுகின்ற நிகழ்ச்சியாக விளங்கியது.

வாழ்வளித்த வழிகாட்டி

ஒரு உண்மைத் தலைவனின் பண்புக்கேற்ப மக்களால் வழிநடத்தப்படாமல் மக்களை வழி நடத்துகின்ற ஒரு வழி காட்டியாக விளங்கினார். எனினும், எத்தகைய முக்கிய முடிவுகளை எடுத்தபோதும், மக்களுடைய உணர்வுகளின் நாடிப் பிடிப்பை அவர் உணர்ந்து பார்க்க என்றும் மறந்ததில்லை.

சாதிவெறியை சாகடித்த சான்றோன்

தனது நாற்பது வயதைத் தாண்டிய நிலையில்தான் அவர் அரசியலில் காலடி எடுத்து வைத்தார். குறிப்பாகச் சொல்லின் 1947-ல்தான் அவர் அரசியலுக்கு வந்தார். ஏற்ற ஒரு தலைவன் நமக்கு இல்லையே என்று தமிழினம் ஏங்கிக் கிடந்த வேளையில் **''இதோ நான் இருக்கிறேன். என்னை நம்புங்கள்''** என்று கூறித் தமிழ் மக்களை வழி நடத்தியபோது தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட தெம்பினையும் முகமர்ச்சியையும் எளிதில் சொற்களால் விளக்க முடியாது. அதனைப் பட்டு உணர்ந்தோர்தான் அதன் பாங்கினை அறிவர்.

அவருடைய தொடக்க கால அரசியல் வாழ்வு சிங்கள ஏகாதிபத்தியத்தை எதிர்ப்பதற்கு முன்பு, தமிழ் மக்களில் படிந்திருந்த மாசினை அகற்றவேண்டிய பொறுப்பு அவர்மீது சுமத்தப்பட்டது. ''உத்தியோகம் புருஷ லட்சணம்'' ''கோழி மேய்த்தாலும் கோர்ணமெந்தில் மேய்க்கவேண்டும்'' என்று பேசுகின்ற அளவிற்கு அனைத்திற்கும் அரசத் தொழிலையே தமிழர் நம்பியிருந்த காலமது. அத்துடன் நானுண்டு, என்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனைவியுண்டு, என் மக்களுண்டு என்றுகுறுகியவட்டத்திற்குள் வாழ்ந்த தமிழ் மக்களைத் தன்னையும் தன் குடும்பத்தையும் மிஞ்சுகின்ற அளவிற்கு தம் மொழி, தம் பண்பாடு, தம் நாகரிகம், தம் வாழ்வியல் முறை, தம் நாடு ஆகியவை பற்றியும் சிந்திக்கவேண்டும் என்ற உணர்வினைத் தூண்டியவர் நமது செல்வா அவர்கள்.

இன்று ஈழத் தமிழினத்திடம் இவை இயல்பாய் அமைந்துள்ள பண்புகள். ஆனால் அன்று அத்தகைய சூழ்நிலை இருக்கவில்லை என்பதை நாம் நன்கு உணர்தல் வேண்டும். அக்காலத்தில் தமிழினத்தைச் சாகடிக்கும் சாதி வெறிக்கும், தமிழ் மக்கள் ஆட்பட்டிருந்தனர். தமிழினத்தின் சாபக்கேடாய் விளங்கிய இந்தச் சாதி வெறியை முற்றாகச் சாகடித்த பெருமை இச்சான்றோனையே சாரும்.

ஒற்றுமையை உருவாக்கிய ஒப்பற்ற தலைவன்

தந்தை செல்வா ஒரு கிறித்தவர். தமிழ் மக்களில் பெரும் பான்மையோர் சிவநெறி சார்ந்தோர். எனினும் மத உணர்வுக்கு அப்பாற்பட்ட நிலையில் இன உணர்வால் உந்தப்பட்டு அவரைத் தம் தலைவராகத் தமிழினம் ஏற்றது. இது அவருடைய பெருந்தன்மைக்கும் தமிழினத்தின் பரந்த நோக்கிற்கும் சான்றாய் அமைந்துள்ளது.. யாழ்ப்பாணத்தான், வன்னியான், மட்டக்களப்பான், திரிகோணமலையான், மலையகத் தமிழன் என்று மாநிலங்கள் அடிப்படையில் மாறுபட்டு வேறுபட்டுக் கூறுபட்டுக்கிடந்த தமிழனை ஒரு குடையின்கீழ் கொண்டு வந்த பெருமையும் நம் தந்தை செல்வாவையே சாரும். ஓர் இனத்தின் விடுதலைக்கு அவ்வினத்திடம் காணப்படுகின்ற ஒற்றுமை உணர்வுதான் உயிர்நாடி என்பதை உணர்ந்து அனைத்துத் துறைகளிலும் தமிழனை ஒன்றுபடுத்திய பெருமை அவரையே சாரும். காரணம் அத்தகைய ஆளுமை அவரிடம் குடிகொண்டிருந்தது.

இனப்பாட்சியில் - இனிய வாழ்வு காண சிங்களவர் மறுத்தனர்

ஒன்றுக்கு மேற்பட்ட இனங்கள் வாழுகின்ற நாட்டில்-ஒன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றுக்கு மேற்பட்ட மொழி, பண்பாடு, நாகரிகம், வாழ்வியல் முறை நிலவுகின்ற நாட்டில் ஒற்றையாட்சி உதவாது. அது எண்ணிக்கை ஏற்றமுள்ள ஒரு இனத்தின் பேரினவாதத்துக்குத் தான் வழி வகுக்கும் என்பதனை நன்கு உணர்ந்து இலங்கையில் சிங்களவர்களும், செந்தமிழர்களும் தமக்குள் முட்டி மோதாது ஒவ்வொரு இனத்தின் தனித்துவத்தையும் பேணி அதே வேளையில் அந்நாட்டின் ஒற்றுமையை நிலை நாட்ட உகந்த ஒரே வழி இணைப்பாட்சிதான் என்பதை உணர்ந்து **''இணைப்பாட்சியில் இனிய வாழ்வு காண்போம். தமிழரின் தனித்துவத்தை நிலை நாட்டுவோம்; இலங்கைத் தீவில் ஒற்றுமையைப் பேணுவோம்''** என்று ஓங்கிக் குரல் எழுப்பினார் நம் செல்வா அவர்கள்.

ஆனால் இணைப்பாட்சி முறை ஒரு நாட்டில் வெற்றி பெற வேண்டுமென்றால் அங்கு வாழும் இனங்களிடையே மற்றைய இனங்களின் நல்லெண்ணத்தில் நம்பிக்கை வைக்கின்ற இயல்பும் இருக்க வேண்டும். இது இல்லாத நிலையில் இணைப்பாட்சித் தத்துவம் என்பது ஏற்றுக்கொள்ளப்படத்தக்க ஒரு கோட்பாடாக விளங்க முடியாது. இணைப்பாட்சியில் இனிய வாழ்வு காண்போம் என்று குரல் எழுப்பியபோதும், மாநிலத் தன்னாட்சி, பிரதேச சபை, மாவட்ட சபை, அதிகாரங்களைப் பண்முகப்படுத்துதல் அல்லது பகிர்ந்துகொள்ளல் என்ற கோட்பாட்டின் அடிப்படையில் சிங்களத் தலைவர்களிடையும் சிங்கள மக்களிடையிலும் மனமாற்றத்தைக் கொண்டுவர தந்தை செல்வா பலமுறை முயன்றார்.

இந்த முயற்சியின் விளைவே 1957-ல் செல்வநாயகம்-பண்டாரநாயகா ஒப்பந்தம் தோன்றியது. 1965-ல் செல்வநாயகம் சேனநாயகா ஒப்பந்தம் செய்யப்பட்டது. 1970-களில் செல்வ நாயகம்-சிரிமாவோ உடன்பாடு உருவாகியது.

ஆனால், மேற்கூறிய ஒப்பந்தங்கள், உடன்படிக்கைகள் எல்லாம் மை காய்வதற்கு முன்பேயே சிங்களத் தலைவர்களால் கிழித்தெறியப்பட்டதனால்தான் இனிமேல் சிங்கள மக்களோடு கூடி வாழ முடியாது என்ற முடிவிற்குத் தந்தை செல்வா வந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தார். அவர் காட்டிய வழியைத் தமிழ் மக்கள் அப்படியே ஏற்றனர்.

தள்ளாட்ட நிலையில் தமிழ் ஈழத்தின் தோற்றம்

இலங்கைக்கு 1948-ல் விடுதலை கிடைத்ததாகச் சொல்லப் படுகிறது. ஆனால், இந்த விடுதலை வெள்ளையனுக்குப் பதில் சிங்களவன் ஆட்சிக் கட்டில் ஏறவே வழி வகுத்தது. மக்களாட்சி என்ற பெயரில் மாக்களாட்சியும், ஒற்றையாட்சி என்ற பெயரில் தமிழினத்தை ஒழித்துக் கட்டுகின்ற முயற்சி களும் தொடர்ச்சியாக ஏற்பட்டதன் விளைவே சிங்களப் பெரும் பான்மை இனத்தின் நிலையான ஆட்சிக்கு வழி வகுக்க வாய்ப் பாகியது.

இலங்கைப் பாராளுமன்ற அமைப்பில் தந்தை செல்வநாய கம் நம்பிக்கை இழந்தார். இலங்கைப் பாராளுமன்றத்தில் ஈழத் தமிழர்களின் பிரச்சினைகள் அனைத்தையும் சிங்களத் தலைகளை எண்ணியே, எண்ணிக்கை பலம் கொண்டே தீர்க்க முனைந்ததால் சிங்களத் தலைகளும் தமிழ்த் தலைகளும் முட்டி மோதின. இரத்த வெள்ளமும் பெருக்கெடுத்தது.

1956-ம் ஆண்டு ஏற்பட்ட இனக் கலவரம், 1958-ல் நடை பெற்ற இனப் படுகொலை, 1961-ல் காந்தீய வழியில் நடாத் தப்பட்ட அறப் போராட்டம், சிங்கள அரசினால் வெறி நோக் கோடு முறியடிக்கப்பட்ட நிகழ்ச்சி, பின்பு 1968-ல் தமிழ் மக்க ளுக்குச் சில சலுகைகளை வழங்குவதை எதிர்த்து சிங்கள முற் போக்குவாதிகள் என்று கூறப்பட்ட இடதுசாரி இயக்கங்கள் ஆடிய வெறியாட்டம், பின்பு 1971-ல் படித்த சிங்கள இளைஞர் களிடையே ஏற்பட்ட இனவெறிக் கிளர்ச்சி, 1974-ல் அரசிய லுக்கப்பால் யாழ்ப்பாணத்தில் நடாத்தப்பட்ட நான்காம் அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் சிங்களக் காவல் துறையினர் 9 அப்பாவித் தமிழர்களைச் சாகடித்த நிகழ்ச்சி பின்பு குறைந்த அளவு ஆறு அம்சக் கோரிக்கைகளைத் தந்தை செல்வாவின் தலைமையில் சிங்களத் தலைவர்களிடம் ஒப் படைக்கப்பட்ட நிலையிலும் சிங்களத் தலைமைப் பீடம் இனவெறி தலைவிரித்தாட, எம் கோரிக்கைகளுக்கு அவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் செவிமடுக்க மறுத்ததன் விளைவே 1976-ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் வட்டுக்கோட்டையில் விட்டுக்கொடுக்காது எடுக்கப்பட்ட தீர்மானமாகிய ''எம்மிழந்த இறைமையை எம்மிழந்த விடுதலையை, மீண்டும் நிலைநாட்டினால் அன்றி எமக்கு வாழ்வு இல்லை'' என்ற முடிவுக்கு தந்தை செல்வா வந்தார்.

தந்தை செல்வா தமிழ் மக்களுக்கு இட்ட இறுதி ஆணை

இலங்கைக்கு விடுதலை கிடைத்ததாகச் சொல்லப்படும் 1948-ம் ஆண்டு தொட்டு 1976-ம் ஆண்டு வரை ஈழத்தமிழ் மக்களின் கொடியுரிமை, வாக்குரிமை, குடியுரிமை, நில உரிமை, மொழி உரிமை, தொழில் உரிமை, கல்வியுரிமை, மத உரிமை, ஆகிய அனைத்து உரிமைகளும் பறிக்கப்பட்ட நிலையில் எம் தமிழ் ஈழ மண்ணிலேயே நாம் வேரோடும் வேரின் மண்ணோடும் சாய்க்கப்படுகின்ற நிலை உருவாகியபோதுதான் இனி மேல் சிங்களக் கொலையாளிகளுடன் கூடி வாழ முயல்வது தற் கொலைக்கு ஒப்பான செயல் என்று தந்தை செல்வா தீர்க்கமான முடிவுக்கு வந்தார். அதனால்தான், தான் சாவதற்குச் சில காலத்திற்கு முன்பு 19-11-1976-ல் ஈழத் தமிழ் மக்களுக்கு தம் இறுதி ஆணை என்று கூறத்தக்க முறையில் உள்ளம் உருக்குகின்ற நிலையில் நெஞ்சைத் தொடும் பாங்கில் வரலாறு படைக்கும் பின்வரும் கூற்றினை இலங்கை நாடாளுமன்றத்தில் தந்தை செல்வா மொழிந்தார்.

''தமிழ் பேசும் மக்களின் இழந்த உரிமைகளை மீட்பதற்காக நாங்கள் ஒரு காலகட்டத்தில் கூட்டாட்சி இயக்கத்தை ஆரம்பித்தோம். ஆனால், கூட்டரசு மூலம் தமிழ் பேசும் மக்களின் உரிமைகளை நிலை நாட்டுவது சாத்தியப்படாது. கடந்த கால அனுபவங்கள்மூலம் இப்போது அறிந்துகொண்டுவிட்டோம்.

இந்த அனுபவங்களின் அடிப்படையில் நாங்கள் தனியாகப் பிரிந்து வாழ வேண்டியதுதான் என்ற முடிவுக்கு வந்துவிட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டோம். இதை நாம் செய்யாவிட்டால் தமிழினம் தமது இழந்த உரிமைகளை ஒரு போதும் மீட்டுக்கொள்ள முடியாது.

எங்கள் முன்னோர்கள் புத்திசாலிகளாக இருந்தனர். அவர்கள் தங்களுக்கெனத் தனியாட்சியை வைத்திருந்தனர். இலங்கையின் வரலாற்றில் தங்களுக்கென ஓர் இடம் இருக்கின்றது.

எங்கள் இயக்கம் நாட்டைப் பிரிக்கும்படி கோரவில்லை இழந்த எங்கள் உரிமையான அரசை மீள அமைக்க வேண்டும் என்பதே எங்கள் நிலையாகும்.

''தனித் தமிழ் ஈழத்தை நிறுவும் இலட்சியத்தை நோக்கி எங்கள் இயக்கம் முன்னேறுகிறது. தனித் தமிழ் ஈழம் நிறுவுவது சுலபமான காரியமல்ல என்பதும் மிகவும் கடின மானமென்பதும் எங்களுக்குத் தெரியும். ஆனால், நாம் ஒன்றில் சிங்களவரின் அதிகாரத்துக்குள்ளிருந்து விடுபட்டு வெளியேற வேண்டும். அல்லது அழிந்துபோக வேண்டும். எனவே நாங்கள் போராடித் தனித் தமிழ் ஈழத்தை நிறுவியே தீருவோம். **நாங்கள் கூட்டாட்சிக் கோரிக்கையை அடியோடு கைவிட்டு விட்டோம். எங்கள் தனி நாட்டுக்கான இயக்கம் அகிம்சை அடிப்படையிலேயே நடைபெறும்.**

இந்திய வம்சவழித் தமிழருக்காகப் போரிட்டவர்

எதிர்காலத்தை எண்ணிப் பார்ப்பது (Concept of Futurology) என்ற அரசியல் கோட்பாட்டிற்கு அமையவும், அறிவுடையார் ஆவது அறிவர் என்ற வள்ளுவன் வழியிலும் சிந்தித்துச் செயலாற்றிய நம் செல்வநாயகம் அவர்கள் 1948-ம் ஆண்டு, இந்தியா வம்சா வழித் தமிழ் மக்களின் குடியுரிமையும் வாக்குரிமையையும் பறிக்கின்ற வஞ்சகச் சட்டம் இலங்கைப் பாராளுமன்றத்தில் அன்றைய தலைமை அமைச்சர் திரு. டி. எஸ். சேனநாயக்காவினால் கொண்டு வந்து நிறைவேறிய போது ''இன்று இந்திய வம்சா வழித் தமிழ் மக்களின் கழுத்தில் கத்தி வைக்கப்படுகிறது. நாளை இலங்கைத் தமிழ் மக்களுக்கும் இந்நிலைதான் ஏற்படும். எனவேதான், இலங்கையின் பொருளியல் வளத்துக்கு 65 விழுக்காட்டுக்கு மேல் வருவாயைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றுத் தரும் உழைத்துழைத்து உருக்குலையும். இந்திய வம்சா வழித் தமிழ் மக்களை அரசியல் அநாதைகளாக ஆக்குவதற்கு நான் என்றும் உடந்தையாக இருக்கப்போவதில்லை என்று ஓங்கிப் போர்க்குரல் எழுப்பியதோடு 1949-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 18-ம் தேதி இலங்கை தமிழரசுக் கட்சியை உருவாக்கியபோது இந்திய வம்சா வழித்தமிழ் மக்கள் தாமிழந்த குடியுரிமையையும், வாக்குரிமையையும் மீண்டும் பெற்றுத்தர என் வாழ்நாள் முழுவதும் போராடுவேன் என்று சொல்லியதோடு வாழ்வின் இறுதி மூச்சுவரை இந்திய வம்சாவழித் தமிழ் மக்களின் அடிமை வாழ்வை ஒழித்திட எழுப்பிய குரலையோ நடத்திய போராட்டங்களையோ நாம் எளிதில் மறப்பதற்கில்லை. இலங்கையின் தொன்மைக் குடி மக்களுக்கும் பின் வந்த இந்திய வம்சா வழி மக்களுக்கும் இடையே பிரிவையும் பிளவையும் ஏற்படுத்தி ஈழத்து மக்களை பூண்டோடு அழிக்கின்ற முறையில், அரசியல் தலைவர்கள் சிலர் காலத்திற்குக் காலம் தமிழகத்தில் குரல் எழுப்புவது உண்டு. இவர்கள் எல்லாம் தந்தை செல்வாவின் வாழ்வையும் பணியையும் முழுமையாக பயில்வார்களாயின் இத்தகைய தப்புக் கணக்குப் போட்டு தமிழ் மக்களை வேறுபடுத்திக் கூறுபோட முயலமாட்டார்கள்.

தாயகத்தை வலியுறுத்திய தலைவன்

ஒரு இனம், மொழி, உரிமை உட்பட அனைத்து உரிமைகளையும் இழந்தாலும் மீண்டும் வாழ்வு பெறுவதற்கு வாய்ப்பு உண்டு. ஆனால், ஒரு இனம் தன் தாயகத்தை, தன் வாழ்வகத்தை, தன் பாரம்பரிய பிரதேசத்தைப் பறி கொடுக்குமாயின், அந்த இனத்திற்கு எதிர்காலமே இல்லை. (Land is necessary for the self expression ofan ethnic group) (ஒரு இனம் தன்னைத்தானே உணர்த்துவதற்கு அதற்கு ஒரு தாயகம் வேண்டும்.)

இந்த உண்மையை ஈழத்து மக்களை வழி நடத்திய எந்தத் தலைவனையும் விட ஆணித்தரமாக வலியுறுத்தி தூங்கிக் கிடந்த ஈழத் தமிழினத்தை விழிப்போடு இருக்கச் செய்த பெருமை தந்தை செல்வாவையே சாரும். இலங்கையில் ஒவ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வொரு முறையும் இனப்படுகொலை ஏற்படுகின்றபோது ஈழத் தமிழ் மக்கள் ஓடி ஒதுங்கி வாழ்வு பெறும் நிலப்பரப்பு இலங்கையின் வடகிழக்கு மாநிலங்களாகும். இந்த நிலப்பரப்பைத் தான் எங்கள் தமிழ் ஈழமென்று அனைத்துத் தமிழ் மக்களும் ஒன்றுபட்டு ஓங்கிக் குரல் எழுப்புகின்றனர்.

தந்தை செல்வாவோடு அடிக்கடி பயணம் செய்கின்ற வாய்ப்பு எனக்குக் கிடைத்ததுண்டு. குறிப்பாக திருகோணமலை மாவட்டத்தின் குக்கிராமங்கள் எல்லாம் யாம் சென்று பார்வையிட்டபோதெல்லாம் ''மூன்று போக விளைச்சலுள்ள இந்தப் பூமியையா நாம் இழப்பது'' என்று உணர்ச்சி வயப்பட்டு கண்கள் கலங்கிய நிலையில் அவர் கூறிய கூற்றுகளை இன்று எண்ணுகிறபோதுகூட எம்மையறியாமலே எம் கண்களில் நீர் பெருகுகின்றது. தந்தை செல்வா வழியில் நிலப் பாதுகாப்புப் பற்றி சிந்தித்த மூன்று தலைவர்களையும் நாம் இங்கு நினைவுகொள்ளல் நலம். ஒருவர் வழக்குரைஞர் சு. வன்னியசிங்கம், இரண்டாமவர் டாக்டர் இ. மு. வி. நாகநாதன், மற்றையவர் சிந்தனைச்சிற்பி சி. கதிர்வேற்பிள்ளை. இக்காரணங்களால்தான் வாழ்வகத்தைக் காத்து வண்டமிழை வாழ்வித்த வன்னியசிங்கத்தை வாழ்த்துவோம் என்ற கூற்றும் ''பொல்லா விலங்குகளுக்கும், கீழ்ப் பறவைகளுக்கும், இலங்கையில் பாதுகாப்பு உண்டு. ஆனால், ஈழத் தமிழருக்கோ அந்தப்பாதுகாப்பு இல்லை'' என்று நாகம்போல் சீறியநாகநாதனையும், ''சுதந்திரத்திற்காக மட்டும் நாம் சுதந்திரம் கேட்கவில்லை. எம் தமிழ் மண்ணில் விளைந்த சோற்றை பிறர் பறிக்காது உண்பதற்கும் எமக்கு சுதந்திரம் வேண்டும்'' என்று கூறிய சிந்தனைச் சிற்பி திரு. சி. கதிர்வேற்பிள்ளையையும் நாம் இச் சூழ்நிலையில் நன்றி உணர்வோடு நினைவுகொள்கிறோம்.

துறைகள் அனைத்திலும் ஈழத் தமிழனுக்கு வழிகாட்டிய தந்தை செல்வா 1977-ம் ஆண்டு **ஏப்ரல் 26-ல் மறைந்தார்**. அவர் மறைந்து 13 ஆண்டுகள் உருண்டோடிய பிறகும் ஈழத்து மக்களுடைய எதிர்காலம் ஏக்கம் நிறைந்து காணப்படுகிறது. எனினும் எம் தந்தை வழியில் சிந்தித்துச் செய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாற்றி வந்துள்ள நாம் அவர் தம் இறுதிக்காலத்தில் கூறி வந்துள்ள அறிவுரைகளை நினைவுகொள்வோமாக. இதோ அவர் செப்பிய உறுதி படைத்த மொழிகள்.

1. போர்க்கோலம் வேண்டும்

''தமிழினத்தில் உரிமைப் போராட்டத்தில் இரத்தம் சிந்தியும் சிறையேற்றும், பொருள் நட்டமடைந்தும், உயிர் துறந்தும் அல்லல் உற்றுள்ளோம். இருந்தும் இதுவரை வெற்றி கிடைக்கவில்லை. ஆனாலும் வெற்றி கிடைக்கும் நாள் வெகு தூரத்தில் இல்லை என்றேதான் நான் கூற விரும்புகிறேன்.

கடந்த காலங்களில் பல கஷ்டங்கள் ஏற்பட்டாலும் இறுதி வெற்றி தமிழினத்திற்காக என்பது சந்தேகமறத் தெளிவாகிவிட்டது. இருந்தாலும் பூரண வெற்றி கிடைக்கும்வரை போர்க்கோலமிருந்தேயாகவேண்டும். தோல்வி மனப்பான்மை அறவே கூடாது.

2. தமிழீழம் பேரம் பேசும் கோரிக்கையல்ல

நாம் விடுக்கும் தனி நாட்டுக் கோரிக்கை மாற்றமுடியாத முடிவாகும். இது வெறும் பேரம் பேசுவதற்காக விடுக்கப்பட்ட கோரிக்கையல்ல. (Our demand for a separate state is an irrevocable Decision. It is not just made for bargaining purposes.'' தனிநாட்டுக் கோரிக்கை என்பது ஒரு புதிய கோரிக்கையல்ல. ஈழத்தில் ஒரு காலத்தில் தமிழர் தனியரசு செலுத்தியிருந்தோம். இழந்த அவ்வரசை மீண்டும் நிலைநாட்ட உறுதி பூண்டுவிட்டோம்.

தமிழ் ஈழம் எங்கள் உயிர்மூச்சு

தூய உள்ளத்தில் துணிவோடு எழுந்த இம்மேற்கோள்களை நாமும் நினைவிற்கொண்டு 'தமிழ் ஈழம் எங்கள் உயிர் மூச்சு" ''எங்கள் தாகம் தமிழ் ஈழம்" என்று ஒங்கி ஒலித்துத் ' தமிழன் வாழ வேண்டின், தமிழன் தன்னை ஆளவேண்டும்" என்ற தாரக மந்திரத்தை உச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரித்து தமிழ் ஈழத்தை நோக்கி வெற்றிப் பாதையில் அடி யெடுத்து வைப்போம். நாம் எடுத்து வைக்கும் ஒவ்வோர் அடியும் எம் தமிழீழ இலட்சியத்தைக் குறிக்கோளை அடைய வழி வகுப்பது உறுதி. எம்மீதும் எம்மைப் படைத்த இறை வன்மீதும் நம்பிக்கை வைத்து மம் பணி தொடரட்டும்.

நாளை நமதே ! வெற்றி நமதே !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்கைக் குன்று!

வாழவேண்டின் வகையாகத்
தமிழன் தன்னை
ஆளவேண்டுமெனும் அசையாத
கொள்கை கொண்டு
தாழா துஞற்றும் தகைமையர்
தமிழருக் காய்
ஊழையும் உப்பக்கம் காணும்
உயர் தமிழன்

ஈழ வேந்தன் அவரே ஓர்
இயக்க மாகும்
நாளும் தமிழ் வளர்க்கும் நடமாடும்
கழக மாகும்
சூளும் பகை முடித்துச் சுதந்திர
ஈழம் தோன்ற
வேழமாய் நின்ற செல்வா வேட்கையின்
விழுது வாழ்க!

--அருகோ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழனை மறவாத தமிழன் !

ஆழி ஆய்ந்து தமிழ்
எழுதும் அழகன்!
தாழி வீழ்ந்த தமிழ்
தாங்கு மறவன்!
ஊழை ஓர்ந்து தமிழ்
உதவு தமிழன்!
ஈழவேந்தன் தமிழ்
இனிய தமிழே!

-காசி ஆனந்தன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org